# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 5 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. ஆரியர் வருகையினால் கேரளம் என மாற்றப்பட்ட நாடு

அ) சேரநாடு ☐ ஆ) சோழநாடு ☐

இ) பாண்டியநாடு ☐ ஈ) ஈழநாடு ☐

2. முதலெழுத்துகள் என்பன

அ) உயிரெழுத்துகளும் ஆய்தஎழுத்தும் ☐

ஆ) மெய்யெழுத்துகளும் உயிர்மெய்யெழுத்துகளும் ☐

இ) உயிர்எழுத்துகளும் மெய்யெழுத்துகளும் ☐

ஈ) மெய்யெழுத்துகளும் ஆய்தஎழுத்தும் ☐

3. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" எனக் கூறும் நூல்

அ) திருக்குறள் ☐ ஆ) தொல்காப்பியம் ☐

இ) சிலப்பதிகாரம் ☐ ஈ) புறநானூறு ☐

4. கடலோரக் களப்புகளில் மிகுதியாக மலரும் மலர்

அ) குறிஞ்சி ☐ ஆ) முல்லை ☐

இ) நெய்தல் ☐ ஈ) மருதம் ☐

5. இறந்தகால இடைநிலைகள்

அ) த் ட் ற் ங் ய் ☐ ஆ) த் ட் ற் இன் ன் ☐

இ) த் ட் ம் ய் ர் ☐ ஈ) த் ட் ற் ழ் ம் ☐

6. அந்நாளில் மிலேச்சர் என அழைக்கப்பட்டவர்

அ) சோழர் ☐ ஆ) பாண்டியர் ☐

இ) ஆரியர் ☐ ஈ) தமிழர் ☐

7. மணிப்பிரவாள நடை தோன்றியது

அ) கழகக் காலத்தில் ☐

ஆ) அறநெறிக்காலத்தில் ☐

இ) சோழர் காலத்தில் ☐

ஈ) பல்லவர் காலத்தில் ☐

8. வந்தோம் என்பது

அ) தன்மை வினைமுற்று ☐

ஆ) முன்னிலை வினைமுற்று ☐

இ) படர்க்கை வினைமுற்று ☐

ஈ) குறிப்பு வினைமுற்று ☐

9. விவாகம் என்ற சொல்லின் தமிழ்ச்சொல்

அ) கல்யாணம் ☐ ஆ) திருமணம் ☐

இ) பாணிக்கிரகணம் ☐ ஈ ) முகூர்த்தம் ☐

10. திருக்குறளில் ஒழுக்கமுடைமைக்கு முன்னுள்ளஅதிகாரம்

அ) அன்புடைமை ☐ ஆ) அறிவுடைமை ☐

இ) அடக்கமுடைமை ☐ ஈ) பண்புடைமை ☐

11.இலக்கண வகையால் 'இடம்' _______ வகைப்படும்

அ) ஐந்து ☐ ஆ) மூன்று ☐

இ) நான்கு ☐ ஈ) ஆறு ☐

12. 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு விடுதலை கொடுத்த அரசு

அ) இந்திய அரசு ☐ ஆ) ஒல்லாந்தரசு ☐

இ) போர்த்துக்கேய அரசு ☐ ஈ) பிரித்தானிய அரசு ☐

13. முன்னாளில் தமிழர் வழிபட்ட தெய்வங்களில் ஒன்று

அ) உருத்திரன் ☐ ஆ) இந்திரன் ☐

இ) கொற்றவை ☐ ஈ) விட்டுணு ☐

14. எழும்பினாள் என்பதன் பகுதி

அ) எழு ☐ ஆ) எழும்பு ☐

இ) எழும்பி ☐ ஈ) எழுப்பி ☐

15. தேவார காலத்தில் தமிழுக்காகக் கடும் பரப்புரை செய்தவர்

அ) ஞானசம்பந்தர் ☐ ஆ) நக்கீரர் ☐

இ) கபிலர் ☐ ஈ) சேக்கிழார் ☐

16. "வெந்ததே சிந்தை" என்ற கவிதையை எழுதியவர்

அ) மன்னார் அமுதன் ☐

ஆ) அருள் சுப்பிரமணியம் ☐

இ) தாமரைக்கண்ணன் ☐

ஈ) உதயை வீரையன் ☐

17. தலைவணங்கினான் என்ற வேற்றுமைத் தொகையின் விரி

அ) தலைக்கு வணங்கினான்
ஆ) தலையின் வணங்கினான்
இ) தலையால் வணங்கினான்
ஈ ) தலையை வணங்கினான்

18. வாடைக்காற்று வீசும் திசை

அ) வடக்கு ஆ) கிழக்கு
இ) தெற்கு ஈ ) மேற்கு

19. ஆதிமொழிக் குடும்பங்களில் ஒன்றான திராவிட மொழிகளில் தமிழ் தொன்மையானது என்பதை நிறுவியவர்

அ) தனிநாயகம் அடிகளார் ஆ) வீரமாமுனிவர்
இ) கால்டுவெல் ஈ ) பெக்சி அடிகள்

20. எதிரியை விட அஞ்சத்தக்கவன்

அ) இரண்டகன் ஆ) பகைவன்
இ) மாற்றான் ஈ) நண்பன்

21. ஒரு பாடலின் அடியின் முதல் எழுத்து ஒன்றி வருவது

அ) மோனை ஆ) எதுகை
இ) சிலேடை ஈ) உவமை

22. மூவறிவுடைய உயிரி ஒன்று

அ) சிப்பி ஆ) நத்தை
இ) நண்டு ஈ) எறும்பு

23. செயப்படுபொருள் குன்றிய வினை

அ) பாடு ஆ) வரை
இ)உண் ஈ) சிரி

24. நெஞ்சக்கல் என்பது

அ) உவமைஅணி ☐ ஆ) உருவகஅணி ☐

இ) தற்குறிப்பேற்றஅணி ☐ ஈ) உயர்வுநவிற்சி அணி ☐

25. "கோளொத்த சிறைவைத்தாண்ட கொற்றவன்" என்று இராவணனைப் போற்றும் நூல்

அ) கம்பராமாயணம் ☐ ஆ) பாரதம் ☐

இ) சீவகசிந்தாமணி ☐ ஈ) திருவாசகம் ☐

26. தேடினாள் என்ற சொல்லைப் பகுத்தால்

அ) தேடு+இன்+ஆள் ☐ ஆ) தேடு+ன்+ஆள் ☐

இ) தேடி+இன்+ஆள் ☐ ஈ) தேடி+ன்+ஆள் ☐

27. மொழிக்கு முதல் வராத எழுத்துகள்

அ) 147 ☐ ஆ) 100 ☐

இ) 20 ☐ ஈ) 30 ☐

28. ஒழுக்கத்தில் சிறிதும் குறையாது உறுதியுடன் வாழ்வோர்

அ) கரவோர் ☐ ஆ) உரவோர் ☐

இ) கறப்போர் ☐ ஈ) மறப்போர் ☐

29. இலக்கண வகையால் 'எண்' என்பது

அ) தன்மை முன்னிலை ☐ ஆ) உயர்திணை அஃறிணை ☐

இ) ஒருமை பன்மை ☐ ஈ) ஆண்பால் பெண்பால் ☐

30. சிறுபொழுதுகளுள் ஒன்று

அ) கார் ☐ ஆ) கூதிர் ☐

இ) இளவேனில் ☐ ஈ) வைகறை ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தனித்தமிழ் என்ற சிந்தனை தமிழ்மொழி பிறமொழிகள் எவற்றினதும் துணையின்றித் தனித்து இயங்க வல்லது என்பதை வலியுறுத்துகின்றது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கால்டுவெல் முன்வைத்த திராவிட மொழி ஆய்வுகளில் கருக்கொண்ட இச்சிந்தனை மறைமலையடிகளின் பெருமுயற்சியால் தனித்தமிழ் இயக்க வடிவம் பெற்றது. மறைமலையடிகள் ஈழத்திற்குப் பன்முறை வருகை தந்ததை ஒட்டி ஈழத்திலும் தமிழறிஞரிடையே இச்சிந்தனை பரவியது. சுவாமி விபுலாநந்தர், வேந்தனார் போன்றோர் தனித்தமிழ்ச் சிந்தனையால் ஈர்க்கப்பட்டனர். இவர்களுக்குச் சமகாலத்தில் வாழ்ந்தவராகிய புலவர் பாண்டியனார் அவர்கள் வடமொழியிலே ஆழ்ந்த அறிவு பெற்றிருந்த போதும் ஆழ்ந்த தனித்தமிழ்ப் பற்றும் கொண்டிருந்தார். மொழிபெயர்ப்புக் கலையாக்கம் தனித்தமிழிலேயே அமைதல் வேண்டும். தமிழ்ச் சொற்கள் காணப்படாதபோது அவற்றினை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். பிறமொழிச் சொற்களைக் கலப்பவர்கள் தமிழ்மொழியைக் கொலை செய்த கொடியோராவர் என்றார் புலவர் பாண்டியனார். நாம் சொற்களைப் பலமுறை கையாளுதலால், அச் சொற்கள் எளிய சொற்களாகி விடுகின்றன. கையாளாது விடுதலால் எளிய சொற்களும் அரிய சொற்களாகி விடுகின்றன. தமிழில் பொருள் உணரப்படாத சொற்களாயினும் பலமுறை கையாள்வதனால் எளிதில் பொருள் உணரப்படும் வழக்கச் சொற்களாக்கிக் கொள்ளலாம். அவ்வாறு தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் உணர்த்தச் சோம்பலுற்று அவற்றைக் கைவிட முயல்கிறவன் உண்மைத் தமிழனாகான் என்பதே புலவர் பாண்டியனாரது உறுதியான கருத்தாகும்.

1. கால்டுவெல் எத்தனையாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்?

2. தனித்தமிழ் இயக்கம் யாரால் உருவாக்கபட்டது ?

3. ஈழத்தில் தனித்தமிழ்ச் சிந்தனையால் ஈர்க்கப்பட்டோர் யாவர்?

4. நாம் பேசும் சொற்கள் எவ்வகையில் எளிய சொற்களாகின்றன? எப்போது அரிய சொற்களாகின்றன?

5. தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலப்போர் எத்தகையோர்?

புள்ளிகள் 10

3) **பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. பதியெழு அறியாப் பழங்குடி என்று போற்றப்பட்ட இனம் எது? இது எந்நூலில் கூறப்பட்டுள்ளது?

2. மரம், செடி, கொடிகள் தங்களுக்கு ஏற்படும் தீங்கை உணர்கின்றன. ஆனால் அதனை வெளிப்படுத்துவதில்லை என்று நிறுவிய அறிவியலாளர் யார்?

3. 'வெண்ணிப் பறந்தலை' என்னும் இடத்தில் போர்புரிந்த இரு பெரும் மன்னர்களின் பெயர்களைத் தருக. ?

4. விண்ணுந்து பற்றிக் குறிப்பிடும் பழந்தமிழ் இலக்கியங்கள் இரண்டு தருக.

5. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆரிய ஏமாற்றுக் கொள்கைகளை எதிர்த்த கவிஞன் யார்?

6. சிங்கள மயமாக்கப்பட்ட தமிழ் ஊர்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

7. ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில் உள்ள குறள் ஒன்றை எழுதுக.

புள்ளிகள் 10

4) **பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**




**தனித்தமிழ் என்ற சொல்லின் தலைவனே**
**இனித் தமிழ் வெல்லும் என்பேன்**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. அ. அல்வழித்தொகை எத்தனை வகை?

______________________________

ஆ. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

இருபெயரொட்டுப் பண்புத்தொகை ______________

உம்மைத்தொகை ______________

2. சொற்பொருள் தருக.

நுதல் ______________ இழுக்கம் ______________

ஏதம் ______________ சுரும்பு ______________

வயிரியர் ______________ பொதும்பர் ______________

3. அ. சொற்புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

______________________________

ஆ. பின்வருவன எவ்வகைப் புணர்ச்சி?

தமிழினிமை ______________

கடற்கோவில் ______________

நீலவானம் ______________

பந்தாட்டம் ______________

4. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

எதிர்மறைவினை ______________

தெரிநிலைவினைமுற்று ______________

குறிப்பு வினைமுற்று ______________

5. கீழ்வரும் சொற்களை வைத்துச் சொல்லியங்கள் எழுதுக.

திக்குத்திசை ______________

உடலும் உயிரும் போல ______________

கன்னங்கரிய ______________

புள்ளிகள் 15

6) **பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக**

இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னர்த் தென் தமிழகத்திலும் ஈழத்திலும் நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் நீர்நிலைகளை அண்டிய இடங்களில் நிலையான குடியிருப்புகளை அமைத்தனர். அவ்விடங்களில் பல தொழில்களில் ஈடுபட்ட மக்கள் ஒரு குழுமகமாக வாழ்வதற்குப் பெருங்கற்காலப் பண்பாடே கரணியமாக இருந்தது. ஈழத்தில் முதன்முதலாக இரும்பின் பயன்பாடு, குளநீர்ப்பாய்ச்சுகை, கைகளாலும் திரிகைகளாலும் வனையப்பட்ட மட்பாண்டங்கள், கல்மணிகள், சிறுதொழில்நுட்பமுறைகள், பண்டமாற்று முறைகள், நகர உருவாக்கம், அரச உருவாக்கம் என்பன தோன்றுவதற்கும் இப் பெருங்கற்காலப் பண்பாடே கரணியமாக இருந்தது. இப்பண்பாட்டு மக்கள் ஈழத்திலும் தமிழகத்திலும் இறந்தவர்களுக்காகப் பல அளவுகளில் ஈமத்தாழிகளை அமைத்தனர். இவ்வகை ஈமத்தாழிகள் ஈழத்தில் பொம்பரிப்பு, மாமடு, ஆனைக்கோட்டை முதலிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெருங்கற்கால மக்கள் தொடக்கத்தில் சிலவகைக் குறியீடுகளையும் தொடர்ந்து பிராமி என்ற எழுத்தினையும் மட்பாண்டங்களில் பொறிக்கும் மரபைக் கொண்டிருந்தனர். இவையே காலப்போக்கில் தமிழ் எழுத்துமொழி தோன்றக் காரணமாகின.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அறிவியல்

- ஒழுக்கம் உயர்வைத் தரும்
  ஒழுக்கத்தின் அகத்தியம்.
  பல்வேறுபட்ட சூழல்களால் நல்லெழுக்கத்தில் ஏற்படும் தாக்கம்.
  தீய ஒழுக்கத்தினால் ஏற்படும் தீமைகள்.
  நல்லெழுக்கம் தரும் நன்மைகள்.

- தாயகத்தின் விடுதலையும் இளையோரின் பங்களிப்பும்
  தமிழரின் தாயகம் அமைவிடம்.
  விடுதலைப் போராட்டத்திற்கான கரணியம்.
  அறவழிப்போராட்டமும் ஆயுதப் போராட்டமும்
  எம்மண் மீட்புக்கான செயற்பாடுகள்.

புள்ளிகள் 20